**DHEERAN IAS ACADEMY®**
(Specialized Institute for UPSC, SSC, TNPSC, TNUSRB and Banking)
Raj Rathna Building, Lawley Road Bus Stop, Maruthamalai Main Road, Coimbatore -03
Cell: 81783 18007, 93379 97597 Email: dheeraniasacademy@gmail.com

## நடப்பு நிகழ்வுகள் – 2023 - நவம்பர்

### தமிழ்நாடு

- சென்னை பல்லாவரம் நகரில் பன்னாட்டு தொழிற்நுட்ப பூங்காயொன்றை (International Technology Park) தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்துள்ளார்.
  - வரும் 2024-ஆம் ஆண்டு ஜனவரியில் உலக முதலீட்டாளர் மாநாடு-2024 சென்னையில் நடைபெற உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

- தமிழ் வளர்ச்சிதுறை சார்பில் தமிழ்நாடு அரசின் சிறந்த தமிழ் உச்சரிப்பு விருதானது (Best Tamil Pronunciation Award) செல்வக்குமார், பொற்கொடி, சுஜாதா பாபு, திவ்ய நாதன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- சாலைபோக்குவரத்து அமைச்சகம் வெளியிட்டுள்ள ஏற்பட்டுள்ள சாலை விபத்துகள் பற்றிய அறிக்கை – 2022 (Report road accidents)-ல் சாலை விபத்துக்கள் நடைபெறும் மாநிலங்கள் பட்டியலில் முதலிடத்தை தமிழகம் பிடித்துள்ளது.
  - கடந்த ஆண்டான 2022-ல் இந்தியாவில் 4,61,312 சாலை விபத்துகள் நடந்துள்ளன.
  - சாலை விபத்துக்கள் நடைபெறும் மாநிலங்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தினை மத்தியபிரதேசமும், மூன்றாவது இடத்தினை உத்திரபிரதேசமும் பிடித்துள்ளன
  - சாலை விபத்துகள் இறப்பில் முதல் இரு இடங்கள் முறையே உத்திரபிரதேசம், தமிழகம் வகிக்கின்றன.
  - இந்த அறிக்கையின்படி இந்தியாவில் ஒரு மணி நேரத்திற்கு 19 பேர் சாலை விபத்துகளில் இறக்கின்றனர்.
- தமிழகத்தில் சாலைகளில் ஏற்படும் பாதிப்புகளை மக்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு தெரிவிக்க நம்ம சாலை செயலியானது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்துள்ளார்.

- தொழில் வளர்ச்சிக்கு மிகச் சிறந்த துறைமுக உட்கட்டமைப்பு அவசியத்திற்காகவும் கடல்சார் வணிகத்தில் தனியார் துறைகளின் முதலீட்டினை ஈர்க்கும் வகையிலும் தமிழ்நாடு மாநில துறைமுக மேம்பாட்டுக் கொள்கை 2023-யை தமிழக அரசு உருவாக்கியுள்ளது.
  - தமிழ்நாட்டின் கடற்கரையானது 1,076 கி.மீ. நீளத்தையும் 4 பெரிய துறைமுகங்களையும், 17 சிறிய துறைமுகங்களையும் கொண்டுள்ளது.
- கடலூரில் நிறுவப்பட்ட தென்னாட்டின் ஜான்சிராணியான

**அஞ்சலையலையம்மாள் சிலை**யை தமிழக முதல்வர் அவரது சிலையை திறந்து வைத்துள்ளார்.

- தமிழகத்தில் முதன் முறையாக திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பள்ளி மாணாக்கர்களிடையே நல்லலிணக்த்தை ஏற்படுத்த **அன்பாடும் முன்றில் திட்டம்** தொடங்கப்பட்டுள்ளது.

- சென்னையில் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினால் நடப்போம் நலம் பெறுவோம் திட்டமானது துவங்கி வைக்கப்பட்டது.

- பழுதான சாலையை புதுபிக்கவும், புதிய சாலைய அமைக்கவும் முதல்வர் கிராம சாலை திட்டமானது தொடங்கப்பட்ட முதல்வர் கிராம சாலை திட்டத்தின் இலக்கானது 2024-ம் ஆண்டாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

- சென்னை ஐஐடி-ஆனது தன்னுடைய சர்வதேச வளாகத்தினை தான்சானியாவின் சான்சிபாரில் தொடங்கி உள்ளது.
    - இதன் மூலம் சர்வதேச வளாகத்தினை தொடங்கும் முதல் ஐஐடி என்ற பெருமையை சென்னை ஐஐடி பெறுகிறது.

- தமிழக அரசு சார்பில் தமிழக கடல்பகுதிகளில் உள்ள டால்பின்களை பாதுகாக்க ரூ.8.13 கோடி செலவில் டால்பின் திட்டமானது தொடங்கப்பட உள்ளது.
    - தமிழ்நாட்டில் 9-க்கும் மேற்பட்ட டால்பின் வகைகள் காணப்படுகின்றன. மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகத்தில் டால்பின்கள் அதிமாக காணப்படுகின்றன.
    - 2021-ஆம் ஆண்டில் டால்பின் திட்டமானது தொடங்கப்பட்டது.
    - டால்பின்கள் தினம் – அக்டோபர் 05

- தமிழக அரசானது தமிழ் மொழியை மேம்படுத்தும் வகையில் தமிழ்ப்பேசி (Tamilpesi) செயலியை தொடங்கியுள்ளது.

- உலகளவில் தமிழ்நாடானது உடல் உறுப்பு தானத்தில் முதலிடம் பிடித்துள்ளதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
    - உயிரிழப்பு ஏற்படும்போது உடல் உறுப்புகளை தானம் செய்பவர்களின் இறுதிச் சடங்கின்போது அரசு மரியாதை அளிக்கப்படும் என்று அறிவிப்பிற்கு பிறகு உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கை 2,700-ளென உயர்ந்துள்ளது.
    - உடல் உறுப்புதான திட்டமானது 2007-2008-ல் தொடங்கப்பட்டுள்ளது.

- 1938, நவம்பர் 13-ல் ஈ.வெ.ராமசாமிக்கு பெரியார் என்ற பட்டமானது வழங்கப்பட்ட நாள்
    - பெரியார் பட்டமானது சென்னையில் வைத்து நடைபெற்ற தமிழ் பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ராமசாமிக்கு வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு (TNPSC), ஆசிரியர் தேர்வு வாரிய தேர்வு (TRB), மத்திய அரசுப் பணியாளர் தேர்வு (UPSC), வங்கி, ரயில்வே போன்ற பணிகளுக்கான போட்டி தேர்வுகளுக்கு மாதிரி வினாத்தாள்களை மாணவர்கள் இலவசமாக பயன்படுத்தும் வகையில் e-learning திட்டமானது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
    - தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை இயக்குநரகம், பொது நூலகத் துறை, அண்ணா நூலகம் இணைந்து இத்திட்டதினை அறிமுகம் செய்துள்ளன.
    - இணைய தள முகவரி – https://elms.annacentenarylibrary.org/

- நகரங்களுக்கிடையே சரக்குகளை எளிதாகவும், திறமையாகவும் கொண்டு செல்வதற்கு உதவும் வகையில் ஆப்ட்ரூட் (OptRoute) என்ற செயலியானது உருவாக்கப்பட்டுள்ளது.
    - இதனை சென்னை ஐஐடி-யின் ஆசிரியர்கள், மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் இணைந்து வடிவமைத்துள்ளனர்.
    - இடைத்தரகர் யாரும் இல்லாமல் ஓட்டுநரையும், நுகர்வோரையும் நேரடியாக இணைக்கும் வகையில் இச்செயலியானது உருவாக்கப்பட்டுள்ளது.

- 15-வது மத்திய நிதி ஆணையம் மூலமாக தமிழகத்தின் ஊரகப்பகுதிகளுக்கு ரூ.836.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
    - 15வது நிதி ஆணைய தலைவர் – ஸ்ரீ என்.கே சிங்
    - அரசமைப்பு சட்டம் 280-வது பிரிவின் படி ஒவ்வொரு 5 ஆண்டுக்கும் நிதிக்குழு அமைக்கப்படும்
    - மத்திய, மாநில அரசுகளுக்கு இடையேயான நிதிப்பகிர்வு, மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிதியுதவிகள் குறித்த பரிந்துரையை மத்திய அரசுக்கு வழங்கும்.

- சுதந்திரப் போராட்ட தியாகி சங்கரய்யா தனது 102 வயதில் (1922-2023) காலமானார்.
    - 1967, 1977, 1980 ஆகிய ஆண்டுகளில் மதுரை கிழக்கு தொகுதியில் எம்.எல்.ஏ-வாகவும் இருந்துள்ளார்.
    - தமிழக அரசு சார்பில் தகைசால் தமிழர் விருது அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது

- கூர்நோக்கு இல்லங்களை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஒரு நபர் கமிட்டி தலைவரான சந்துரு தனது அறிக்கையை தமிழக முதல்வரிடம் சமர்பித்துள்ளார்.

- தாமிரபரணி ஆற்றிலிருந்து கடற்கரை நகரத்திற்கு குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்ட ராவ்பகதூர் குரூஸ் பெர்னாண்டஸ் (Cruz Fernandez) சிலையானது தூத்துக்குடியில் திறந்து

வைக்கப்பட்டுள்ளது.
  - இவர் தூத்துக்குடியின் தந்தை என அறியப்படுகிறார்.

- ஸ்மார்ட் சிட்டி தரவரிசை (Smart City Ranking)
  - தமிழ்நாட்டின் மதுரை 8வது இடம் பிடித்துள்ளது.
  - முதலிடம் – சூரத் (குஜராத்), இரண்டாமிடம் – ஆக்ரா (உத்திரப்பிரதேசம்), மூன்றாமிடம் – அகமதாபாத் (குஜராத்) ஆகியன பிடித்துள்ளன.

- தமிழ்நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம் மதுரை மாவட்டத்தில் உருவாக்கப்பட்டு வருகிறது.

- நவம்பர் 17-ல் வங்கக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலானது புயலாக வலப்பெற உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
  - நவம்பர் 18-ல் வங்கதேச கடற்கரையை ஒட்டி நகர்ந்து மோங்கா-கேப்புபாராவு பகுதிகளுக்கு இடையே கடக்க உள்ளதாக தெவிக்கப்பட்டுள்ளது.
  - இப்புயலுக்கு மதிலி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்பெயரை மாலத்தீவு பரிந்துரை செய்துள்ளது.
- தேங்காய்களுக்களுக்கா ஹலோ நாரியல் அழைப்பு மையத்தினை தென்னை வளர்ச்சி வாரியம் அறிமுகம் செய்துள்ளது.
  - இதன் மூலம் தென்னை அறுவடை மற்றும் தாவர மேலாண்மை நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

- மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருள்களை இணையதளம் வழியாகப் பெற மதி சந்தை புதிய இணைய வசதியினை விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் துவங்கி வைத்துள்ளார்.
  - இணையதள முகவரி : www.mathisandhai.com
  - மகளிர் மேம்பாட்டுத்திட்டங்களை அறிந்து கொள்ளும் முற்றம் மாத இதழுக்கான இணையவெளியும் தொடங்கப்பட்டுள்ளது.

- திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் அருகிலுள்ள அத்தாளநல்லூர் அருள்மிகு கஜேந்திர வரதராஜ பெருமாள் கோவில் பாண்டியர், சோழர் காலத்து கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
  - இக்கோயிலானது பாண்டிய மன்னன் மாறவர்மன் ஸ்ரீவல்லபனால் கட்டப்பட்டது.
  - இக் கல்வெட்டு 15 ஆம் நூற்றாண்டைச் சேரந்தது.
  - கோயிலின் பிரகாரத்தில் முதலாம் குலோத்துங்க சோழன் (1070-1122), சடையவர்மான் வீர பாண்டியன் (1253-83). முதலாம் மாறவர்மன் குலசேகரன் (1268-1312) ஆகியோரது கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

- இந்தியாவிலேயே மக்கள் தொகையை கட்டுப்பாட்டில் முதல் மாநிலமாக தமிழகம் அமைந்துள்ளதென அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

- அனைத்து பள்ளிகளிலும் உட்கட்டமைப்பை மேம்படுத்த 234×77 திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

- தமிழகத்தின் முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி (96) காலமானார்.
    - இவர் உச்சநீதிமன்ற முதல் பெண் நீதிபதி ஆவார்.
    - 1927-ல் கேரளாவில் பத்தனம்திட்டாவில் பிறந்தவர்
    - 1983-ல் கேரள உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றியவர்.
    - 1989-ல் முதல் உச்சநீதிமன்ற நீதியாக நியமிக்கபட்டுள்ளார்.
    - 1997-2001 வரை தமிழக ஆளுநராக பதவி வகித்துள்ளார்.

- மக்களுடன் முதல்வர் திட்டத்திற்கான சிறப்பு அதிகாரியாக மதுசூதன் ரெட்டி ஐஏஎஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
    - இத்திட்டமானது முதலமைச்சரின் முகவரி துறையின் கீழ் இயங்குகிறது.

- தொழில் முனைவோரை ஊக்குவிக்க, தொழில்முனைவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஸ்டார் அப் தமிழா தொலைக்காட்சி நிகழ்ச்சியை தமிழக அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்துள்ளார்.
    - மேலும் www.starupthamizha.tv இணையதளத்தினை துவங்கி வைத்துள்ளார்.
- எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த பள்ளி அளவில் மாணவர் குழுக்களை அமைக்க பள்ளி கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.
    - எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி – 01.09.2023

- இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியில் தமிழகம் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது.
    - 2023 அக்டோபர் மாத நிலவரப்படி தமிழகத்தின் சூரிய சக்தி மின் உற்பத்தி திறனானது 7,146.59 மெகா வாட் ஆகும்
    - புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
    - குஜராத் மாநிலமானது முதலிடத்தை பிடித்துள்ளது.

- நாட்டின் முன்னாள் பிரதமரான வி.பி.சிங் சிலையானது சென்னை மாநில கல்லூரியில் தமிழக முதல்வர் திறந்து வைத்துள்ளார்.
    - இந்தியாவின் 7வது பிரதமராக (2.12.1989 – 10.10.1990) பதவி வகித்தவர்.
    - காவிரி நதிநீர் தீர்பாயம் உருவாக காரணமானவர்.
    - பி.பி.மண்டல் கமிஷனின் பரிந்துரையான பிற்படுத்தப்பட்டோருக்கான 27% இட ஒதுக்கீட்டை அறிவித்தவர்.

- ஆங்கிலோ இந்தியன், எஸ்.சி., எஸ்.டி. நாடாளுமன்றம், சட்டமன்ற இடஒதுக்கீட்டினை 62வது சட்டதிருத்தம் மூலம் 10 ஆண்டுகள் மேலும் நீடித்தவர்.

- தமிழ்நாட்டின் பெரம்பலூர் மாவட்டத்தில் JR One Kothri Manufacturing Plant என்னும் பெயரில் புதிய காலணி தொழிற்சாலை தொடங்கப்பட்டுள்ளது.

## இந்தியா

- கேரளா மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் ஹால் மார்க் மையங்கள் அமைத்ததன் மூலம் இந்தியாவில் ஹால்மார்க் மையங்கள் அதிகம் கொண்ட முதல் மாநிலமாக உருவெடுத்துள்ளது.
    - ஹால்மார்க்கிங் என்பது விலைமதிப்பற்ற உலோகப் பொருட்களில் உள்ள விலைமதிப்பற்ற உலோகத்தின் விகிதாசார உள்ளடக்கத்தை துல்லியமாக நிர்ணயித்து அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யும் செயல்முறையாகும்.
    - நகை ஹால்மார்க்கிங் திட்டம் 2000 இல் BIS ஆல் அறிமுகப்படுத்தப்பட்டது.
    - தற்போது,தங்கம் மற்றும் வெள்ளி ஆகிய இரண்டு விலைமதிப்பற்ற உலோகங்கள் இந்தியாவில் ஹால்மார்க்கிங் செயல்முறையின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.
- ஏக்தா நகர்-அகமதபாத் வழியாக குஜராத் மாநிலத்தின் முதல் பாரம்பரிய ரயிலானது (First Heritage Train) தொடங்கப்பட்டுள்ளது.

- யுனஸ்கோவால் (UNESCO) இந்தியாவின் இலக்கிய நகரமாக கேரளாவின் கோழிக்கோடும் இசை நகரமாக மத்திய பிரதேசத்தின் குவாலியரும் அறிவிக்கப்பட்டுள்ளது.
    - UNESCO – United Nations Educational, Scientific and Cultural Organization
    - இவ்வமைப்பானது 16 நவம்பர் 1945-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
    - இந்தியாவில் 42 யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளங்கள் உள்ளன. நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூரால் நிறுவப்பட்ட சாந்திநிகேதன், செப்டம்பர் 2023 இல் இந்தியாவில் உலக பாரம்பரிய தளமாக அறிவிக்கப்படும் 41 வது தளமாகிறது. யுனெஸ்கோ செப்டம்பர் 2023 இல் கர்நாடகாவில் உள்ள ஹொய்சாளர்களின் புனித குழுமங்களையும் பட்டியலில் சேர்த்தது.

- வடகிழக்கு பிராந்தியம் மற்றும் வங்கதேசத்திற்கு இடையிலான முதல் எல்லை தாண்டிய இரயில் தடமானது திரிபுராவின் அகர்தலா-வங்தேசத்தின் அகௌரா (15 கி.மீ) இடையே தொடங்கப்பட்டுள்ளது.
    - குல்னா-மோங்லா துறைமுகம் இடையேயான அகல ரயில் பாதை திட்டமானது (65 கி.மீ) தொடங்கப்பட்டுள்ளது
    - மைத்ரீ அனல் மின் நிலையத்தில் 1,320 மெகாவாட் திறன் கொண்ட 2-வது நிலையமானது தொடங்கப்பட்டுள்ளது.
    - இம்மூன்று திட்டங்களும் இந்திய உதவியுடன் வங்கதேசத்தில்

தொடங்கப்பட்டள்ளன.

- தேர்தல் பற்றிய விழிப்புணர்வு மாணவர்களிடையே ஏற்படுத்த தேர்தல் ஆணையம் மற்றும் மத்திய கல்வி அமைச்சகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
    - மேல்நிலைப்பள்ளிகளில் ஜனநாயக அறைகளும், பாடப்புத்தகத்தில் தேர்தல் விழிப்புணர்வு குறித்த பாடங்களையும் NCERT வெளியிட உள்ளது.

- சிவப்பு மணல் உள்ளிட்ட மரங்களின் சட்டவிரோதமான வர்த்தககத்தை தடுப்பதற்காக தொடங்கப்பட்ட திட்டமான **ஆபரேஷன் சேஷா**வின் (Operation Sesha) 4வது கட்டத்தினை மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் துவங்கி வைத்துள்ளார்.
    - 2015-ஆம் ஆண்டு இத்திட்டம் கொண்டு வரப்பட்டது.

- மகாராஷ்டிராவின் மும்பையிலிருந்து இந்திய சந்தையின் முதல் சர்வதேச பயணிகள் கப்பலான கோஸ்டா செரீனாவினை மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் சர்பானந்தா சோனாவால் தொடங்கி வைத்துள்ளார்.

- யாழ்பாணத்தில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் எஸ்பிஐ வங்கியின் இரண்டாவது கிளையை தொடங்கி வைத்துள்ளார்.
    - இலங்கையில் நேரடியாக வர்த்தகத்தைத் தொடங்கிய முதல் வெளிநாட்டு வங்கி SBI ஆகும்.

- ஒரே நாடு ஒரே பதிவு என்ற பெயரில் தேசிய மருத்துவ ஆணையம் (NMC) மருத்துவர்களுக்காக தனி அடையாள எண் வழங்க உள்ளது.
    - NMC – National Medical Council

- குஜராத்தின் காந்திநகரில் ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா இடையேயான முதல் கல்வி மற்றும் திறன் கவுன்சில் கூட்டம் நடைபெறுகிறது.

- சிறுத்தைகளுக்காக பெங்களூருவில் சிறுத்தை புலி தனிப்படை (Leopard Task Force) அமைக்கப்பட உள்ளது.

- ஏடியெஸ் கொசுக்கள் மூலம் பரவும் ஜிகா தீநுண்மி பாதிப்பு வடக்கு கண்ணூர் மாவட்டத்தில் (கேரளா) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- பாரத் ஆர்கானிக்ஸ் (Bharat Organics' brand) என்ற பெயரில் இயற்கை வேளாண்மை விளைபொருட்களின் விற்பனையை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் அமித்ஷா துவங்கி துவங்கி வைத்தார்.

- உலகின் முதல் AI விர்ச்சுவல் ஏஜென்ட்டை ஏர் இந்திய பணியமர்த்தி உள்ளது.
    - இதற்கு பெயர் மகாராஜா என பெயர் வைக்கப்பட்டுள்து.

- இது ஒரு நாளில் 6,000 கேள்விகளுக்கு நான்கு மொழியில் பதிலளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

➢ இந்திய தண்டனைச் சட்டம் (IPC) 1860-ஐ மாற்றம் செய்ய பாரதிய நியாய சம்ஹிதா (PNS) மசோதா 2023, குற்றவியல் நடைமுறைச்சட்டம் (CrPa) 1898-ஐ மாற்றம் செய்ய பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹித் (PNSS) மசோதா 2023-ம் மாநிலங்களவைத் தலைவரான தன்கரிடம் அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது.

➢ இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI), ஜோக்காட்டா (Jocata) இணைந்து சம்பூரன் குறியீட்டை அறிமுகம் செய்துள்ளது.
- இந்திய MSME துறையின் செயல்திறன் பற்றிய நிகழ்நேர தகவலை வழங்க இக்குறியீடு வழங்குகிறது.

➢ போர் விமானங்களை தாக்கி அழிக்கும் இக்லா-எஸ் ஏவுகணைகளை கொள்முதல் செய்ய இந்தியா மற்றும் ரஷ்யா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 5 முதல் 6 கி.மீ தொலைவில் உள்ள இலக்குகளை தாக்கி அழிக்கும் தன்மை கொண்டது.

➢ ஹரியானா, ஃபரிதாபாத்தில் 9வது இந்திய சர்வதேச அறிவியல் விழா நடைபெற உள்ளது.
- IISF – India International Science Festival

➢ பயிர் விலைய நிர்ணயிப்பதில் வணிகர்களின் ஏக போகத்தை தகர்க்க பிஎம் கிசான் பாய் (PM Kisan Bhai) திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டமானது விவசாய அமைச்சகத்தின் மூலம் தொடங்கப்படுகிறது.

➢ நிலையான வீட்டு வசதிக்கான நெஸ்ட் என்ற புதிய முயற்சியை இந்திய பசுமைக் கட்டிடக் கவுன்சில் உருவாக்கியுள்ளது.

➢ குஜராத்தின் அகமதாபத்தில் உலக மீன்பிடி மாநாடு 2023 (World Fisheries Conference) நடைபெற உள்ளது.
- அதிக மீன் உற்பத்தி செய்யப்படும் மாநிலம் – ஆந்திரா

➢ உலகளாவிய யூனிகார்ன் தரவரிசையில் இந்தியா மூன்றாம் இடத்தை பிடித்துள்ளது.
- இந்தியாவில் 72 யூனிகார்ன் நிறுவனங்கள் உள்ளன.

➢ கேரள மாநிலத்தின் கொச்சி நகரமானது 2024-ம் ஆண்டில் ஆசியாவில் பார்க்க வேண்டிய சிறந்த இடங்கள் பட்டியலில் முதலிடத்தை பிடித்துள்ளது.

➢ புதுடில்லி பிரகதி மைதானத்தில் 47வது இந்திய சர்வதேச வர்த்தக

கண்காட்சியானது நடைபெறுகிறது.

- இக்கண்காட்சியானது நவம்பர் 14-27 வரை நடைபெறுகிறது.
- கருப்பொருள்: வசுவதைவ குடும்பம் வர்த்தகத்தால் ஒன்றுபட்டது.

➢ தில்லியில் இந்தியா-ஆஸ்திரேலியா இடையே பாதுகாப்பு, வெளியுறவுத்துறை அமைச்சர்களிடையே 2+2 பேச்சுவார்த்தை நடைபெற்றது.
  - இந்தோ-பசுபிக் பிராந்திய நலனுக்கான இருநாட்டு பாதுகாப்பு உறவுகளை விரிவுபடுத்துவது குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.
  - இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் ரிசரட் மார்ல்ஸ், வெளியுறவு அமைச்சர் பென்னி வாங் ஆகியோர் பங்கேற்றனர்.

➢ கிராமப்புற வீட்டு வாசலில் டிஜிட்டல் திறன் பயிற்சியைக் கொண்டு வருவதற்தாக மத்திய அரசு சார்பில் சக்கரங்களில் திறன்கள் திட்டமானது தொடங்கப்பட உள்ளது.

➢ உள்நாட்டு மீன்பிடிப்பில் சிறந்த மாநிலமாக உத்திரப்பிரதேசம் தேர்வாகியுள்ளது.
  - இதற்கான முதல் பரிசானது உலகளாவிய மீன்பிடி மாநாடு 2023-ல் வழங்கபட உள்ளது.

➢ அருணாச்சலப்பிரதேசத்தில் புதிய மியூசிக் தவளை இனமாது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
  - நிதிரானா நோவா டிஹிங் (*Nidirana noadihing*) இனத்தை சார்ந்தது.
  - நோவா டிஹிங் நதியின் பெயரானது சூட்டப்பட்டுள்ளது.
  - ஆண் தவளைகள் 1.8-2.3 அங்குல நீளம் கொண்டவை.
  - பெண் தவளைகள் 2.4-2.6 அங்குல நீளம் கொண்டவை

➢ ஜம்மு & காஷ்மீரில் விளையும் கிஷ்த்வார் குங்குமப்பூவிற்கு புவிசார் குறியீடு (GI Tag) வழங்கப்பட்டுள்ளது.

➢ இந்தியா-வங்கதேசம் இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சியானது சூர்ய கிரண் (Surya Kiran) என்ற பெயரில் நடைபெற்றது.

➢ இந்தியா-ஆஸ்திரேலியா இடையேயான 2வது கூட்டு இராணுவப் பயிற்சியானது AUSTRAHIND-23 என்ற பெயரில் நடைபெற்றது.
  - முதல் பயிற்சியானது ராஜஸ்தானில் நடைபெற்றது.

➢ தில்லியில் உள்ள ஆப்கானிஸ்தானின் தூதரகம் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது.
  - 2021-ல் ஆப்கானிஸ்தானில் தலிபன் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதினால் உலக நாடுகள் தலிபன்களின் ஆட்சியை

அங்கீகரிக்கவில்லை.

- இந்தியாவும் இதன் நடவடிக்கையாக தூதரகத்தை மூடியுள்ளது.

- கோவா மாநிலத்தின் முந்திரிக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- போர்ச்சுகீயர்களால் முந்திரி இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டது.

➢ இந்தியாவின் மிகப்பெரிய புலிகள் காப்பகமானது மத்தியபிரதேசத்தில் தாமோ மாவட்டத்தில் அமைய உள்ளது.
  - நௌராதேகி வனவிலங்கு சரணாலயம், ராணி துர்காவதி வனவிலங்கு சரணாலயம் இணைந்து உருவாக்கப்பட்ட உள்ளது

➢ இந்தியாவின் அதிக பால் உற்பத்தி செய்யும் மாநிலாக உத்திரபிரதேசம் திகழ்கிறது.
  - இராஜஸ்தான், மத்தியபிரதேசம் அடுத்ததடுத்த இடங்களை பிடித்துள்ளன.

➢ இந்தியாவின் முட்டை உற்பத்தியில் ஆந்திரபிரதேசம் முதலிடத்தில் உள்ளது.
  - தமிழ்நாடு, தெலுங்கானா அடுத்தடுத்த இடங்களில் திகழ்கின்றன.

➢ ஆசியாவின் மிகப்பெரிய திறந்தவெளி வருடாந்திர வர்த்தக கண்காட்சியானது ஒடிசாவில் நடத்தப்பட உள்ளது.
  - பரி ஜத்ரா (Bali Jatra) என்னும் பெயரில் கட்டாக்கின் மகாநதியின் கரையின் ஓரத்தில் நடத்தப்படுகிறது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

➢ நட்சத்திரங்களின் உருவாக்கம் மற்றும் அதன் வாழ்க்கை சுழற்சியை ஆய்வு செய்யவதற்காக அமெரிக்காவின் நாசா விண்வெளி மையமானது INFUSE என்ற புதிய ராக்கெட்டினை விண்ணில் செலுத்தியுள்ளது.

➢ கழிவுநீரிலிருந்து மாசுக்களை அகற்றுவதற்கான ஏரோஜெல் உறிஞ்சுகளை சென்னை ஐஐடி மற்றும் இஸ்ரேலின் டெல் அவிவ் நிறுவனம் இணைந்து உருவாக்கியுள்ளன.
  - பெரும்பாலும் காற்றுடன் கலந்திருக்கும் மிகமிக இலகுரக திடப் பொருட்களாக ஏரோஜெல்கள் சிறந்த உறிஞ்சிகளாக (மாசுபாடுகளை அகற்றப் பயன்படுத்தும் திடப்பொருள்) செயல்படுகின்றன.

➢ 50 கி.மீ முதல் 500 கிமீ தொலைவில் தரையில் உள்ள இலக்குகளை தாக்கி அழிக்கும் பிரளய் ஏவுகணையை (Pralay Missile) வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
  - இந்த ஏவுகணையானது 500 கிலோ முதல் 1000 கிலோ எடை வரை எடையுள்ள குண்டுகளை சுமந்து செல்லும் தன்மை உடையது.

- நீர்மூழ்கி எதிர்ப்பு போர் ஷாலோ வாட்டர் கிராஃப்ட் (ASWSWC) திட்டத்தின் 4வது கப்பலை இந்திய கடற்படை அறிமுகம் செய்துள்ளது.
    - இக்கப்பலிற்கு அம்னி எனப் பெயரிடப்பட்டுள்ளது.
    - அமினி கப்பலானது தமிழ்நாடு காட்டுப்பள்ளியில் தொடங்கப்பட்டுள்ளது.
- இளம் வயதினருக்காக உரையாடல் சார்ந்த செயற்கை நுண்ணறிவுக் கருவியான AI சாட்போட் Bard-ஐ கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.
    - இதன் மூலம் மாணவர்கள் மேம்பட்ட ஆன்லைன் பாதுகாப்புடன் கற்றல் அனுபவத்தை மேம்படுத்தலாம்.

- கைப்பேசிகளில் ஸ்பேம் மோசடி அழைப்புகளை தடுக்க தொந்தரவு செய்யாதீர் (Do Not Disturb App) என்ற செயலியானது அறிமுகம் செய்யப்பட உள்ளது.
    - இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் எனப்படும் டிராய் இதனை அறிமுகம் செய்ய உள்ளது.

- அதிக மகசூல் தரும் உயர்தர நறுமண அரிசி ரகமான ஜோஹா அரிசியை உருவாக்கும் பணியில் அஸ்ஸாம் ஆராய்ச்சி நிறுவனம் (ARRI) ஈடுபட்டுள்ளது.
    - 1923-ல் இந்நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது.
    - 45-க்கும் மேற்பட்ட அரிசி ரகங்களை உருவாக்கியுள்ளது.

- உலகின் மிகப்பெரிய பனிபாறையானது நகரத் தொடங்கியுள்ளது.
    - இதற்கு A23a எனப் பெயரிடப்பட்டுள்ளது.

**விருதுகள்**

- கால்பந்து விளையாட்டில் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனைக்கு வழங்கப்படும் பாலோன் டி’ஓர் 2023 (Ballon d’or) விருதானது அர்ஜென்டினாவின் மெஸ்ஸிக்கும், ஸ்பெயினின் – அயிட்டானா பொர்மதிக்கும் வழங்கப்பட்டுள்ளது.
    - இவ்விருதினை மெஸ்ஸி 8வது முறையாக பெறுகிறார்.

- கோர்டிங் இந்தியா (Courting India) என்ற புத்தகத்திற்காக நந்திதாஸ்-க்கு 11வது பிரிட்டிஷ் அகாதெமி புத்தகப் பரிசானது வழங்கப்பட்டுள்ளது.

- 2023-ஆம் ஆண்டிற்கான உலகாளவிய பொறுப்பு சுற்றுலா விருதினை கேரளா மாநிலம் பெற்றுள்ளது.

- தமிழக வளர்ச்சி துறையால் வழங்கப்படும் நற்றமிழ் பாவலர் விருதானது (Natramil Pavalar Award) எழில்வாணன், சுடர்த்தமிழ்ச்சோழன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- கேரளா, பாலக்கோட்டிலுள்ள பி.பாலசுப்பிரமணியன் மேனன் 73 ஆண்டுகள், 60 நாட்களாக வழக்கறிராக பணியாற்றி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.
    - 1950-முதல் தன் பணியை தொடங்கியுள்ளார்

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ICC) கௌரவமிக்க விருதான ஹால் ஆ.ஃப் ஃபேம் விருதிற்கு 3 நபர்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
    - வீரேந்திர சேவாக் – தொடக்க ஆட்டக்கரார் இந்திய அணி
    - டயானா எல்டுல்ஜி – இந்திய மகளிர் அணி முன்னாள் கேப்டன் (விருது பெறும் முதல் இந்திய வீராங்கனை)
    - அரவிந்தா டி சில்வா – இலங்கை அணி

- 2023-ம் ஆண்டிற்கான முகம் விருதானது இந்திய வனத்துறை அதிகாரியான சுதாராாமனுக்கு வழங்கப்பட்டுள்ளது

- சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் (CMRL) கீரின் ஆப்பிள் விருதனை பெற உள்ளது.
    - லண்டனில் கார்பன் குறைப்பு பிரிவின் கீழ் இவ்விருதானது வழங்கப்படுகிறது.
    - CMRL – Chennai Metro Rail Limited

- சர்வதேச நீர்பாசனம் மற்றும் வடிகால் ஆணையம் சார்பில் உலக பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்புக்கான சர்வதேச விருதானது தூத்துக்குடியிலுள்ள ஸ்ரீவைகுண்டம் அணைக்கு வழங்கப்பட்டள்ளது.
    - இந்த அணையானது 150 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்டுள்ளது.

- அயர்லாந்து எழுத்தாளர் பால் லிஞ்சுக்கு புக்கர் பரிசு 2023-ஆனது வழங்கப்பட்டுள்ளது.
    - 1997 – அருந்ததி ராய் – தி காட் ஆப் சுமால் திங்ஸ் (The God of Small Thing)

- இஸ்ரோவின் சுகன்யான் திட்ட முன்னாள் இயக்குநரான விஞ்ஞானி வி.ஆர்.லலிதாம்பிகாவிற்கு பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான லெஜியன் ஆ.ஃப் ஹானர் விருது வழங்கப்பட்டுள்ளது.
    - பிரான்ஸ்-இந்தியா இடையிலான விண்வெளி ஆராய்ச்சி தொடர்பான கூட்டு நடவடிக்கையில் முக்கிய பங்காற்றியதற்காக வழங்கப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- ஹீராலால் சமாரியா இந்திய தலைமை தகவல் ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## வெளிநாட்டு நிகழ்வுகள்

- 06.12.2017-ல் உருவாக்கப்பட்ட சர்வதேச சோலார் கூட்டணியில் 95வது உறுப்பினராக (ISA) சிலி நாடானது இணைந்துள்ளது.

- நவம்பர் 16, 17-ல் இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் பாதுகாப்பு அமைச்சர்கள் கலந்துகொள்ளும் 10-வது ஆசியான் (ASEAN) பாதுகாப்பு அமைச்சகர்கள் கூட்டமானது நடைபெற உள்ளது.
    - இந்தியா சார்பில் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொள்கிறார்.
    - ASEAN – Association of Southeast Asian Nations
- இந்தியா மற்றும் இலங்கை இடையே மித்ர சக்தி என்னும் பெயரில் கூட்டு இராணுவப் பயிற்சியானது நடைபெற்றுள்ளது.

- 2023-ம் ஆண்டிற்கான மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை ஸெய்னனிஸ் பாலசியோஸ் (Nicaragua's Shenice) (நிகரகுவா) தட்டிச் சென்றுள்ளார்

- hallucinate என்ற சொல்லானது 2023-ம் ஆண்டின் சிறந்த சொல்லாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
    - இவ்வார்த்தையானது கேம்பிரிட்ஜ் அகராதியின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- தாய்லாந்தின் பாங்காக்கில் 3வது உலக இந்து மாநாடானது நடைபெற உள்ளது.
    - கருப்பொருள்: தர்மம் வெற்றியின் உறைவிடம்.

- நவம்பர் 30-டிசம்பர் 12 வரை ஐக்கிய அரபு அமீரகம், துபையில் 28வது ஐ.நா. பருவநிலை மாநாடானது நடைபெற உள்ளது.
    - இம்மாநாட்டின்போது டிசம்பர் 1-ல் உலக பருவநிலை நடவடிக்கை உச்சி மாநாட்டில் இந்திய பிரதமர் மோடி கலந்து

- இந்தியர்கள் நுழைவுஇசைவு (VISA) இல்லாமல் செல்ல மலேசிய அரசு அனுமதித்துள்ளது.
    - இந்த அனுமதி டிசம்பர் 1 முதல் 30 நாட்கள் அமலில் இருக்குமென மலேசிய பிரதமர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.
    - தாய்லாந்து, இலங்கையை தொடர்ந்து மலேசியா நுழைவு இசைவினை வழங்கியுள்ளது.

- உலகின் எட்டாவது அதிசயமாக கம்போடியாவின் அங்கோர் வாட் சேர்க்கப்பட்டுள்ளது.
    - 500 ஏக்கர் அளவிலான கோயில் வளாகம்.
- உலகின் மிகப்பெரிய மத நினைவுச் சின்னமாகும்.
    - 12-ம் நூற்றாண்டில் இரண்டாம் ஜெயவர்மனால் விஷ்ணு என்ற கடவுளுக்காக கட்டப்பட்டது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- கிரிக்கெட் ஜாம்பவானான சச்சின் டெண்டுல்கர் சிலையானது மும்மை வான்கடே மைதானத்தில் திறக்கப்பட்டுள்ளது.

- 37-ஆவது தேசிய விளையாட்டுப் போட்டி
    - கோவாவில் நடைபெற்ற 37-ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் மகாராஷ்டிரம், ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்றது.
    - தமிழக அணி 19 தங்கம், 26 வெள்ளி, 32 வெண்கலம் என 77 பதக்கங்களுடன் 10-ஆம் இடம் பிடித்தது.
    - 38-வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் உத்தரகாண்டில் நடைபெற உள்ளது.

- பிரிட்டனில் நடைபெற்று வரும் FIDE கிராண்ட் ஸ்வீஸ் செஸ் தொடரில் மகளிர் பிரிவில் தமிழக வீராங்கனையான வைஷாலி சாம்பியன் பட்டத்தினை தட்டிச் சென்றுள்ளார்.

- ஜார்க்கண்ட்டில் நடைபெற்ற மகளிர் 7வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியில் ஜப்பான் அணியை வீழ்த்தி இந்திய அணி 2வது முறையாக சாம்பியன் பட்டத்தினை வென்றுள்ளது.

- பஞ்சாப் அணி முதல் முதலாக சையத் முஷ்டாக் அலி கோப்பையை வென்று சாதனை படைத்துள்ளது.

## முக்கிய தினங்கள்

- விஜிலென்ஸ் விழிப்புணர்வு வாரம்
    - மத்திய விஜிலென்ஸ் கமிஷன் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் தேதி முதல் நவம்பர் 5 ஆம் தேதி வரை விஜிலென்ஸ் விழிப்புணர்வு வாரத்தை கடைப்பிடிக்கிறது:
    - 2023க்கான கருப்பொருள்: "ஊழலை வேண்டாம் என்று சொல்லுங்கள்; தேசத்திற்கு அர்ப்பணிப்போம்" ("Say no to corruption; commit to the Nation")
    - இது இந்திய அரசாங்கத்தின் அலுவலகங்களில் ஊழலைத் தடுக்க அமைக்கப்பட்ட ஒரு உயர்மட்ட அமைப்பு ஆகும்.
    - லோக்சபா மற்றும் ராஜ்யசபா இரண்டிலும் CVC மசோதா நிறைவேற்றப்பட்ட பிறகு, 2003 ஆம் ஆண்டு மத்திய கண்காணிப்பு சட்டம் அமலுக்கு வந்தது .
    - இந்தியாவின் முதல் தலைமை விஜிலென்ஸ் கமிஷனர் நிட்டூர் சீனிவாச ராவ்.
    - சஞ்சய் கோத்தாரி 2021 ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் மத்திய விஜிலென்ஸ் ஆணையராக உள்ளார்.

CVC மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ளது:

- மத்திய விஜிலென்ஸ் கமிஷனர்
- இரண்டு விஜிலென்ஸ் கமிஷனர் (அதிகபட்ச கமிஷனர்களின் எண்ணிக்கை 2)

- பதவிக் காலம்: நான்கு ஆண்டுகள் அல்லது அவர்கள் 65 வயதை அடைந்தால் (எது முந்தையது)
- அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு, அவர்கள் எந்த மத்திய அல்லது மாநில அரசு நிறுவனத்திலும் மீண்டும் பணியமர்த்தப்படுவதற்கு தகுதியற்றவர்கள்.

➢ உலக சுனாமி விழிப்புணர்வு தினம் (World Tsunami Awareness Day) – Nov 05

➢ தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் (National Cancer Awareness Day) – Nov 07

➢ **தேசிய குழந்தைகள் தினம்** (National Children's Day) – Nov 14

➢ **பழங்குடியினர் பெருமை தினம்** (Janjatiya Gaurav Divas) – Nov 15
- **ஜன்ஜாதிய கௌரவ் திவாஸ்**
- **பிர்சாமுண்டா பிறந்த தினம்** – 15.11.1875

➢ **தேசிய ஒருமைப்பாடு தினம்** (National Integration Day) – Nov 19

➢ **இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட தினம் தேசிய அரசியலமைப்பு தினமாக கொண்டாடப்படுகிறது.**
- 2015 **முதல் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.**

➢ **தேசிய பால் தினம்** (National Milk Day) – Nov 26